**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.92/2022**
Prosecution: **PW10**

Deposition of the witness of **LW19**

| Name | திரு.சின்னய்யா | District | இராணிப்பேட்டை |
|---|---|---|---|
| Father Name | திரு.முருகேச கவுண்டர் | Occupation | விவசாயம் |
| Village /Area | சர்வந்தாங்கல் | Age | 45 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 3103 4069 7786 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **05.03.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள சர்வந்தாங்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 3-ம் எதிரியை மட்டும் எனக்கு தெரியும். மற்ற இருவரையும் எனக்கு தெரியாது. சில வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் மாரியம்மன் கோவில் திருவிழா நடந்த போது நான் வேலைக்கு சென்றுவிட்டு இரவு 8.00 மணிக்கு வீட்டிற்கு வந்த போது திருவிழா ஊர்வலத்தில் தகராறு ஏற்பட்டு எங்கள் ஊரை சேர்ந்த நாகேந்திரன் மற்றும் ரகுவரன் ஆகிய இருவருக்கும் காயம் ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன்.

என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். போலிசார் என்னிடம் கையெழுத்து கேட்டதால் போட்டுக்கொடுத்தேன். பார்வை மகசரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. என் முன்னிலையில் சம்பவ இடத்தை போலிசார் பார்வையிடவில்லை. என் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து பொருள் எதுவும் போலிசார் கைப்பற்றவில்லை. பார்வை மகசரில் உள்ள என்னுடைய முதலாவதாக உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு, சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

ஆய்வாளர் என்னை விசாரித்த போது 28.07.2021-ம் தேதி காலை 6.30 மணிக்கு ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு அவர் தயார் செய்த பார்வை மகசரிலும், சம்பவ இடத்திலிருந்து ரத்தக்கறை படிந்த சிறிய டைல்ஸ் துண்டு-1, ரத்தக்கறை படியாத சிறிய டைல்ஸ் துண்டு-1, ரத்தக்கறை படிந்த பாட்டில் துண்டு-2 ஆகியவற்றை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசரிலும் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு, உண்மையை மறைத்து தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.